# காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் 30.08.2022 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்

**பொருள் எண் :1**

காயல்பட்டினம் நகராட்சியில் 15th CFC (Tied) திட்டம் – 2021 -2022ன் கீழ் ரூ. 10.00இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி அலுவலக வளாகத்தில் கழிப்பிடம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.ஆர். தலவாணிமுத்து, காயல்பட்டினம் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு தற்பொழுது மதிப்பீட்டுத் தொகைக்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இக்கழிப்பிடமானது அலுவலக வளாகத்தின் பின்பக்கத்தில் கட்டப்பட்டுள்ளதால் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் பொதுச்சுகாதார நலன் கருதி கூடுதல் பணிகள் செய்ய வேண்டி இருப்பதால் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 1.50 இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிற்காக முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:151**

- உத்தேச மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் :2**

காயல்பட்டணம் நகராட்சிக்கு எதிராக நடைபெற்று வருகின்ற பசுமை தீர்ப்பாயத்தின் தற்போதைய நிலையில் ஒரு சில வீடுகளில் தரம் பிரிக்காமல் வழஙகப்படும் குப்பைகள் மற்றும் கழிவுகளை சரியாக அகற்ற நகராட்சி பகுதியில் தினசரி உருவாகின்ற திடக்கழிவுகளை (குப்பைகளை) மிக சரியாக தரம் பிரித்து பெற்று திடக்கழிவு மேலாண்மையினை சிறப்பாக கடைபிடித்திடும் வகையில், இந்நகராட்சி பொது மக்களிடம் தத்தம் வீட்டு குப்பைகளை மக்கும்

குப்பைகள் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து, அந்த குப்பைகளை நகராட்சி தூய்மை பணியாளர்களிடம் கொடுப்பதற்கான நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 2022ம் வருடம் செப்டம்பர் 1ம் தேதி முதல் தரம் பிரித்தால் மட்டுமே குப்பைகளை வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.958/2016/அ4

**தீர்மான எண்:152**

இந்நகராட்சி பகுதியில் 2022 ஆம் வருடம் செப்டம்பர் 1-ந் தேதி முதல் குப்பைகளை தரம் பிரித்தால் மட்டுமே வாங்குவதற்கு தீர்மானிக்கப்படுகிறது.

**பொருள் எண் :3**

காயல்பட்டணம் நகராட்சிக்கு எதிராக நடைபெற்று வருகின்ற பசுமை தீர்ப்பாயத்தின் தற்போதைய நிலையில், இநகராட்சியில் வரப்பெறும் குப்பைகள் குறித்து, ஏற்கனவே எதிர்காலத்தினை கருத்தில் கொண்டு, அதிகமான அளவீடாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால், தற்போதைய சூழ்நிலையில், இப்பகுதியில் தினசரி உருவாகின்ற திடக்கழிவுகளை (குப்பைகளை) மிக சரியாக தரம் பிரித்து, அதன் அளவுகளை, அதாவது மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் எவ்வளவு உருவாகிறது என இனம் கண்டு கொள்வதற்கு, இந்நகராட்சி அல்லாத (3வது நபர்களை கொண்டு) தனியார் நிறுவனம் ஒன்றினை கொண்டு, அளவீடு செய்திடவும், அதற்கான செலவினங்களை பொது நிதியில் இருந்து பயன்படுத்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பசுமை தீர்ப்பாய வழக்க சம்பந்தமாக தனியார் நிறுவனம் ஒன்றினை கொண்டு, அளவீடு செய்திட அனுமதிக்கலாம்.

ந.க.எண்.958/2016/அ4

**தீர்மான எண்:153**

அனுமதிக்கப்படுகிறது.

**ஓம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
காயல்பட்டினம் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்,
காயல்பட்டினம் நகராட்சி